**செய்தி வெளியீடு எண்: 78** **நாள்:30.01.2013**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (30.1.2013) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தால் கரூர் மாவட்டம், காகிதபுரத்தில் 100 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவப்பட்டுள்ள புதிய சிமெண்ட் உற்பத்தி தொழிற்சாலையை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கரூர் மாவட்டம், காகிதபுரத்தில் 100 கோடி ரூபாய் முதலீட்டில் புதிய சிமெண்ட் உற்பத்தி தொழிற்சாலையினை நிறுவியுள்ளது. இந்த தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் நாள் ஒன்றுக்கு 600 மெட்ரிக் டன் ஆகும். காகித நிறுவனத்தில் உருவாகும் சுண்ணாம்புக் கழிவு மற்றும் நிறுவனத்தில் அமைந்துள்ள மின்உற்பத்தி நிலையத்தின் உலர் சாம்பல் ஆகியவற்றை முக்கிய மூலப்பொருட்களாக பயன்படுத்தி காகித நிறுவனத்தால் அமைக்கப்படும் இந்தியாவின் முதல் சிமெண்ட் தொழிற்சாலை இது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்தப் புதிய தொழிற்சாலையின் மூலம் 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ள இந்தப் புதிய சிமெண்ட் உற்பத்தி தொழிற்சாலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் 2011–2012ஆம் ஆண்டில் 108 கோடியே 94 லட்சம் ரூபாய் லாபம் ஈட்டியுள்ளது. இதில் தமிழக அரசின் பங்கு ஈவுத்தொகையாக 12 கோடியே 22 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், தொழில் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத் துணை மேலாண்மை இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 30.1.2013